# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 40. முடியொப்பனைக் கூடங்கள் மற்றும் அழககங்கள்

**விளக்கம்**: - இவை முடி வெட்டுதல், சிகை அலங்காரங்கள், தலைமுடிக்கு சாயமிடுதல் ஆகிய சேவைகளை வழங்கும் அதேவேளை முகப் பராமரிப்பு, பாதப் பராமரிப்பு, கால்களை அமுக்கிவிடும் சேவைகள் போன்ற பிற சேவைகளையும் வழங்குகின்றன. கோவிட் தொடர்பான முன்னெச்சரிக்கைகளின் கீழ் இவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட செயல்பாடுகள் மட்டுமே சாத்தியமாகும்.

**பிரத்தியேக தகவல்கள் /வழிகாட்டல்கள்**

**இயக்குனர்/ உரிமையாளர் / வேலை வழங்குனர்**

- செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகச் செயற்படுவதாக உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். (சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 'வேலைத்தளங்களில் கொரோனா வைரஸ் தீவிர நோய் பரவல் தொடர்பான தயார்ப்படுத்தல் மற்றும் பதில் நடவடிக்கைகள் குறித்த செயல்பாட்டு வழிகாட்டுதல்கள்" என்ற இடைக்கால வழிகாட்டுதல் நூலில் முடியொப்பனைக்கூடங்கள் மற்றும் அழககங்கள் தொடர்பான விடயங்களை வாசித்தறிக)
- •தலைமுடியை வெட்டுதல் / செவ்வொழுங்கு செய்தல் (*trimming*), தலைமுடிக்கு சாயமிடுதல், நகப்பராமரிப்பு, பாதப்பராமரிப்பு மற்றும் கை கால்களுக்கு மெழுகிடுதல் ஆகிய சேவைகளை மட்டுமே வழங்கலாம். இந்தச் சேவைகளது பட்டியல் வாடிக்கையாளர்களுக்கு தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும். **தாடி / மீசை ஆகியவற்றினை மழிப்பது பரிந்துரைக்கப்படவில்லை.**
- ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர் இருவருமே முகக்கவசம் அணிய வேண்டும். இதற்கு மேலதிகமாக கூடுதலாக, முடிஒப்பனையாளர் / அலங்கரிப்பவர் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் போது பாதுகாப்புக் கண்ணாடி / கண் கவசம் (*goggles/eye shield*) அணிய வேண்டும்.
- நுழைவாயிலுக்கு அருகில் வாடிக்கையாளர்களும் பணியாளர்களும் கை கழுவுவதற்குரிய வசதிகள் இருத்தல் வேண்டும்
- வாடிக்கையாளர்களிடம் பின்வரும் அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என்று விசாரித்து அறிந்த பின்னர் முன்பதிவு மூலமாகமட்டுமே சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் (லேசான காய்ச்சல், இருமல், தடிமன்).
- சேவைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அனைத்து ஊழியர்களும் கோவிட் தடுப்புத் தொடர்பான புத்தறிவினைப் (*orientation*) பெற்றுக்கொள்ள வேண்டும் (செய்யத் தகுந்தவை மற்றும் செய்யத் தகாதவை போன்ற விடயங்கள்). தொடங்குவதற்கு முன் அனைத்து ஊழியர்களும் ஒரு குறித்த தகவல்களைப் பெற வேண்டும் (செய்யத்தகுந்தவையும்/ செய்யத்தகாதவையும;).
- வாடிக்கையாளர்களிடையே குறைந்தது ஒரு மீற்றர் உடல் இடைவெளி பேணப்படுவதனை உறுதிசெய்க. இதற்கேற்ப முடியொப்பனைக் கூடங்கள் / அழககங்களினுள் நுழையும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவும்.
- சகல துணிவகைகளும் ( தொப்பிகள் மற்றும் துவர்த்தும் துண்டுகள்) ஒவ்வொரு தடவை பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவப்பட வேண்டும், அவ்வாறு கழுவாமல் மற்றொரு வாடிக்கையாளருக்கு அத்துணிகள் ஒருபோதும் பயன்படுத்தப்படக்கூடாது.
- அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் (சீப்புகள் மற்றும் முடி தூரிகைகள் உட்பட), வாடிக்கையாளர் இருந்த கதிரை, மற்றும் அந்தப் பகுதிக்குரிய மேசை ஆகிய அனைத்தும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சேவை வழங்கப்பட்ட பின்னர் தொற்றுநீக்கம் செய்யப்பட்ட பின்னரே மற்றை வாடிக்கையாளருக்குச் சேவை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். பணிமனை மற்றும் நாற்காலி என்பவை ஒரு வாடிக்கையாளருக்குப் பயன்படுத்தப்பட்ட பிறகு, மற்றொரு வாடிக்கையாளரைப் பயன்படுத்துவதற்கு முன்பு கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும்.
- முடிஒப்பனையாளர்கள் / அலங்கரிப்பவர்கள் தமக்கிடையே உபகரணங்களைப் பரிமாறிக்கொள்வதனைத் தவிர்க்க வேண்டும்.
- கதவு கைப்பிடிகள், எண்ணகங்கள் (*counters*) போன்ற அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளைக் கிரமமாகத் தொற்றுநீக்கம் செய்யுங்கள்
- சிற்றிதழ்கள், புதினப்பத்திரிகைகள், சேவை வகைப்பட்டியல் அட்டைகள் (*service menus*) மற்றும் அலங்காரங்கள் போன்ற தேவையற்ற பொருட்களை அகற்றிவிடவும்.

- வளாகத்திற்குள் குறுக்கு காற்றோட்டத்தை வலுப்படுத்த கதவுகள், ஜன்னல்கள் முடிந்தவரை திறந்து வைக்கவும்
- வளிப்பதனாக்கிகளை (ஏதேனும் இருந்தால்) மிதமான வேகத்தில் இயக்கவும். வாரத்திற்கு ஒரு முறை அதன் வடிகட்டிகளை சுத்தம் செய்யவும் / கழுவவும்
- பின்வரும் செயன்முறைகள் தொற்றுநோயைப் பரப்புவதற்கான மிக அதிக ஆபத்தினைக் கொண்டவை எனக் கருதப்படுகின்றன:
  - முகத்தில் நூலிடுதல் /மெழுகிடுதல் (Threading/ waxing of the faces).
  - முகத்தைச் சுத்தப்படுத்துதல் மற்றும் முகத்தை வெள்ளையாக்குதல் (Facials, clean ups, face bleach).
  - தாடியை செவ்வொழுங்கு செய்து சாயமிடல் (Beard Trim).
  - கண் இமை நீட்டிப்புகள் (Eyelash extensions).
  - ஒப்பனைகள் (Makeups).

- மேற்படி செயன்முறைகள் மிகவும் அத்தியாவசியமானவை எனக்கருதப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும் மற்றும் திருமண ஆடையணிதல் குறைந்தபட்ச தொடுதலுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயன்முறைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், முகாமைத்துவமானது 'இந்த அழககம் கோவிட் -19 பரவுகையைத் தடுப்பதற்கான சகல முன்னெச்சரிக்கை நடைமுறைகளையும் பின்பற்றும்" என்று தெரிவிக்கும் உத்தரவாதப் படிவத்தினைக் காட்சிப்படுத்தவேண்டும். இந்தச் சேவைகளை நாடி வரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் முற்பதிவினை மேற்கொள்ளும் போது தற்போதைய நடைமுறைகள் குறித்த அறிவுறுத்தல் தாள் ஒன்று வழங்கப்படவேண்டும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**வாடிக்கையாளர்கள்**

- நீங்கள் நோயுற்றிருந்தால் முடியொப்பனை நிலையங்கள்/அழககங்களுக்குச் செல்லக்கூடாது (காய்ச்சல், இருமல், தடிமன்).
- முதலில் தொலைபேசி ஊடாக அழைத்து முன்பதிவு செய்ய வேண்டும்.
- எப்போதும் முகக்கவசம்அணிய வேண்டும்.
- காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.
- அறிவுறுத்தும் முறைகள்
- முடியொப்பனைக்கூடத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் குறித்து அறிவிக்கப்பட வேண்டும்.
- தொடர்புகொள்வதற்கான விபரங்களுடன் கீழக்காணும் தகவல்களுடன் ஒரு அறிவித்தலானது முடியொப்பனைக்கூடத்தினால் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

  - முன்பதிவு செய்தே சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
  - முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.
  - வந்ததும் கைகளைக் கழுவ வேண்டும்.
  - அனுமதிக்கப்பட்ட சேவைகள் மாத்திரமே வழங்கப்படும். இதனைக் கண்காணிப்பதற்காக நிலையம் எந்த நேரத்திலும் சோதனைக்கு உட்படுத்தப்படலாம்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020